சப்ரகமுவ மாகாண கல்வித் திணைக்களம்
வாராந்த பாடசாலை

பாடம் :- தமிழ் மொழியும் இலக்கியமும்
3ம் வாரம்
தரம் :- 07
தயாரித்தவர்:- P. கமலமாலனி (இ/ப/ இராசகலை தமிழ் வித்தியாலயம்)

**பாட இலக்கம் : 03**

**தலைப்பு : கடமை**

**01.கீழ் வரும் வினாக்களுக்கு விடை தருக.**

1. கடமை எனும் கட்டுரையின் ஆசிரியர் யார்?
2. கடமை என்றால் என்ன?
3. இக் கட்டுரைப் பகுதி எந்நூலில் இருந்து எடுக்கப்பட்டது?
4. நாம் யார் யாருக்கு கடமைப்பட்டிருக்கிறோம்?
5. நாம் முழு உரிமையாகப் பெற்றுக்கொண்டவை எவை?
6. மனிதனுக்குள்ள தலையாய கடமை எது?
7. இக் கட்டுரையில் இடம்பெறும் பழமொழி யாது?
8. இப் பூமியிலுள்ள யாவருக்கும் உரித்தான நான்கு கடமைகளும் எவை?
9. நான்கு வகையான பயன்களும் எவை?
10. மாணவராகிய உமது கடமைகள் ஐந்து தருக.

**02. கீழ் வரும் சொற்களுக்கான பொருளை தருக.**

| | |
|---|---|
| 1. கலி - | 2. பொரி - |
| 3. குலவி - | 4. பரவை - |
| 5. பானம் - | 6. வாளை - |
| 7. கிறி - | 8. கூழம் - |
| 9. வருத்தல் - | 10. வண்மை - |

**03. சரியான விடையைத் தெரிவு செய்க.**

1. ஒரு வாக்கியத்தின் உறுப்புக்களாவன,

   1. எழுவாய் 2. பயனிலை 3. செயப்படுபொருள் 4. மூன்றும்

2. ஒரு வாக்கியத்தில் கருத்து முற்றுப் பெறும் இடம்,

   1. எழுவாய் 2. பயனிலை 3. செயப்படுபொருள் 4. அடைமொழி

3. ஒரு வாக்கியத்தில் கருத்து எழும் இடம்,

   1. எழுவாய் 2. பயனிலை 3. செயப்படுபொருள் 4. அடைமொழி

4. பறவை வானில் பறந்தது. இங்கு செயப்படுபொருள்,

   1. பறவை 2. வானில் 3. பறந்தது 4. இல்லை

5. அவர்கள் விளையாடினார்கள். இவ்வாக்கியம் ஏற்றுள்ள பால்,

   1. ஆண்பால் 2. பலர்பால் 3. பலவின்பால் 4. ஒன்றன்பால்

6. மாலதி நடனம் ஆடினாள். இவ் வாக்கியம் ஏற்றுள்ள இடம்,

   1. படர்க்கை 2. தன்மை 3. முன்னிலை 4. இல்லை

7. நான் புதிய ஆடைகளை வேகமாக அணிந்தேன். இங்கு பெயரடை,

   1. நான் 2. வேகமாக 3. புதிய 4. ஆடை

8. சிறந்த மாணவன் அழகான ஓவியங்களை வேகமாக வரைந்தான். இங்கு பயனிலை அடைமொழி,

   1. சிறந்த 2. வரைந்தான் 3. வேகமாக 4. அழகான

**04. கீழ் வரும் வாக்கியங்களை அடைமொழி சேர்த்து எழுதுக.**

1. மேகலா பாடல் பாடினாள்.

2. பாடசாலை சூழலை சுத்தம் செய்தேன்.

3. பெற்றோர் பிள்ளைகளை வளர்த்தனர்.

4. அம்மா உணவு சமைத்தார்.

5. மாணவன் பாடம் எழுதினான்.